<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 42/2021</u>

பெயர் : முத்துசாமி
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 24.02.2026

---

<u>குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)</u>

1. வாதிகள் இந்த வழக்கை எதற்காக போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தான க.ச.610/1 காலை மொத்தம் 5.77 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாகும். மேற்படி க.ச.610/1 காலை சம்மந்தமாக ராமசாமி கவுண்டரின் மக்கள் 1981ம் ஆண்டில் ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் குமாரசாமி, முத்துசாமி ஆகிய நான் மற்றும் சாமியப்பன் ஆகியோர் மேற்படி 5.77 ஏக்கர் பூமியை சரிசமமாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

2. எனது சகோதரர் நாச்சிமுத்துக்கு வேறு காலையில் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு சொத்து சி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாக்பிரிவினை செய்த சமயத்தில் க.ச.610/1 காலை உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சாமியப்பன் என்பவரிடம் இருந்து டி அட்டவணை சொத்தில் 1.91 3/4 ஏக்கர் பூமியை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது எதிர்வழக்குரையில் சாமியப்பனிடம் இருந்து 1.79 ஏக்கர் ஒரு பகுதியாகவும் மற்றும் மீதம் உள்ளவற்றை ஒரு பகுதியாகவும் 2 இனமாக வாங்கியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே இனமாகத்தான் வாங்கினேன். 2 இனமாக வாங்கியுள்ளதாக எனது எதிர் வழக்குரையில் சொல்லியிருந்தால் அது தவறாகும்.

3. நான் குமாரசாமிக்கு ஒரு 95 செண்ட் பூமியை கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் கிரையம் பெற்றது மற்றும் பாகப்பிரிவினையில் குமாரசாமிக்கு ஒதுக்கப்ட்டது இரண்டையும் சேர்த்து அவருடைய பங்கு 2.86 1/2 என்றால் சரியல்ல. உட்பிரிவு செய்யப்படும் போது அவருக்கு குறைவாகத்தான் உள்ளது.

குமாரசாமிக்க பாத்தியப்பட்ட 2.86 1/2 பூமியைத்தான் வாதிகள் செல்வராஜ் மற்றும் பாலசுப்பிரமணி ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனது பங்கையும் சேர்த்து கிரையம் கொடுத்துள்ளார்.

4. க.ச.610/1 காலை என்பது எ, பி, சி, டி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்பதால் அதனை நான் அப்போதே ஏற்றுக்கொண்டதால் தான் எந்த ஆட்சேபனையும் நான் தெரிவிக்காமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது அண்ணனிடம் இருந்து கிரையம் பெற்றது மற்றும் பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டது இரண்டையும் சேர்த்து என்னுடைய பங்கு 3.83 ஏக்கர் ஆகும். அதில் நான் 95 செண்ட் பூமியை எனது அண்ணன் குமாரசாமிக்கு விற்றுள்ளேன். விற்றது போக என்னிடம் 1 1/2 பங்கு 2.78 ஏக்கர் உள்ளது.

5. நான் எனது மகன் சங்கர் கணேஷ் மற்றும் எனது மகள் விமலாதேவி ஆகியோருடன் சேர்ந்து க.ச.610/1 எ, 1 பி, 1 சி ஆகியவற்றில் சேர்த்து 2.88 1/2 ஏக்கர் விற்றுள்ளேன் என்றால் சரிதான். நானும் குமாரசாமி மக்களும் சேர்ந்து வாதிகளுக்கு க.ச.610/1 இ காலையில் 7 1/2 செண்ட் விற்றுள்ளோம் என்றால் சரிதான். நான் எனக்கு பாத்தியப்பட்ட பூமி முழுவதும் விற்றுவிட்டேன் என்றும், தற்போது க.ச.610/1 சி காலையில் எனக்கு எந்த பூமியும் கிடையாது என்றால் சரியல்ல.

6. நான் எனது எதிர்வழக்குரையில் குமாரசாமிக்கு மொத்தமாக 2.86 3/4 பூமி பாத்தியம் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. குமாரசாமி அவருக்கு பாத்தியப்பட்ட பூமியைத்தான் வாதிகளுக்கு விற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் வாங்கியுள்ள பூமிகள் தற்போது உட்பிரிவு ஆகி உள்ளது என்றால் சரிதான். நான் உட்பிரிவு தவறுதலாக உள்ளது என்று நான் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ஊரில் இல்லாததால் உட்பிரிவு ஆனது எனக்கு தெரியாது. மேற்படி உட்பிரிவு ஆனது சமீப காலமாக தான் செய்யப்பட்டது என்றும், அது பற்றி எனக்கு தெரியும் என்றும் சொன்னால சரியல்ல.

7. வாதிகள் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் நான் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் வாங்கிய சொத்துக்கள்

முறையாக வாங்கியதால் தான் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரையில் 75 செண்ட் மட்டும் தான் நான் விற்றுள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 75 செண்டிற்கு தனியாக பத்திரம் எதுவும் கிடையாது என்றும், 2.88 1/2 ஏக்கருக்கும் ஒரே பத்திரம் என்றால் சரியல்ல.

8. இடம் பிரச்சனை சம்மந்தமாக பல்லடம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். அவர் புகார் மனுவை காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்தார். காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் முறையாக விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் என்னுடைய ஆவணங்களை சரிவர அளிக்காததால் அவர்கள் நீதிமன்றம் என்னை தீர்த்துக்கொள்ள அறிவுறித்தினார்கள் என்றால் சரியல்ல.

9. நான் வாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வாதிகள் மேற்படி அறிவிப்புற்கு கொடுத்த பதில் அறிவிப்பிலேயே முறையாக தக்க பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பிய பின்னர் வாதிகள் பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. க.ச.610/1 காலையில் எனக்கு ஏதேனும் சொத்துஇருப்பதாக நான் சொன்னால் எனக்கு சொத்தினை விற்ற சாமியப்பன் பங்கில் தான் கோர முடியும் என்றும் அதற்கு முரணாக நானே குமாரசாமிக்கு 1 1/2 பங்கு உள்ளது என்று ஒப்புக்கொண்டுவிட்டு மாற்றி அவருக்கு விற்பதற்கு உரிமை இல்லை என்று கூற முடியாது என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரை சங்கதிகளை நிலை நிறுத்தும் வண்ணம் எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு எதிராக எந்த எதிர்கேரிமை பரிகாரமும் கோராததால் எனது எதிர் வாதம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகள் அவர்களது

சொத்தை அனுபவம் செய்வதற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளிடம் இருந்து மிரட்டி அவர்களிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.24 18:32:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.